## தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியம் - 2016

---

தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று. காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பொதுத் திறைசேரிச் செயலாளர், கமத்தொழில், காணி மற்றும் வன வள அமைச்சின் செயலாளர், தாவரவியல் பூங்கா பணிப்பாளர், பொதுத் திறைசேரியின் பாதீட்டுப் பணிப்பாளர் மற்றும் கமத்தொழில் பணிப்பாளர் நாயகம் என்பவர்களுக்கு இடையே 1996 திசெம்பர் 20 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் (4)(ஜே) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தாவரவியல் பூங்கா நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிலிருந்து மேவுகை செய்யப்படாத நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்திச் செலவினம் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 13 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் ஒவ்வொரு பொருண்மையான மற்றும் சமமான விடய வகுப்புக்கள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 3,887,001 இற்கு கொள்வனவு செய்த கணனி மற்றும் உபபாகங்கள் இயந்திர உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. இதனால் கணனி உப பாகங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் ஒரே பெறுமானத்தேய்வு வீதத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தன.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) 2016 ஆம் ஆண்டில் ஹக்கல தாவரவியல் பூங்காவின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ஒப்பந்த தொழிலாளர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 960,453 ஆன மீண்டெழும் செலவினம் காணி அபிவிருத்தியின் கீழ் மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மதியுரை சேவைகளை வழங்குவதற்குரியதாக செலுத்த வேணடிய ரூபா 120,000 கட்டணங்கள் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது கம்பஹா தாவரவியல் பூங்காவின் நாற்று வலை நிர்மாணத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 4,643,510 ஆன முற்பணம் பிழையாக கட்டிட அபிவிருத்தி சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் மலர்ச்செய்கை ஆலோசனைப் புத்தகங்கள் மற்றும் வழிகாட்டி பிரசுரங்களின் ஆரம்ப இருப்பு ரூபா 1,079,773 குறைத்து சீராக்கம் செய்யப்பட்டமை மீளாய்வாண்டின் போது சீராக்கம் செய்யப்படாமையால் ஆரம்ப இருப்பு அத்தொகையால் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 தொங்கல் கணக்கு

2015 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட ரூபா 5,180 ஆன தொங்கல் கணக்கின் மீதி இனங்காணப்படாமலும் நாட்குறிப்புப் பதிவுகள் பயன்படுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது தொங்கல் கணக்கு வரவு வைக்கப்பட்டு முன்னைய ஆண்டில் முன்கொண்டு வரப்பட்ட மிகைக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 152,235,357 மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 121,905,252 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 30,330,105 ஆன அதிகரிப்பு காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 04 வருமான விடயங்களின் வருமானம் ரூபா 62,098,721 ஆல் அதிகரித்தமை அதற்கான பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 யூன் 15 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட நலிவுகள் அவ்வப்போது தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| **கட்டுப்பாட்டுத் துறைகள்** | | **அவதானிப்புக்கள்** |
| --- | --- | --- |
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | சொத்துக்களை சரியாக வகைப்படுத்தி சரியான பெறுமதிகளில் கணக்கீடு செய்யப்படாமை. |
| (ஆ) இருப்புக் கட்டுப்பாடு | (i) | இருப்புப் பெறுவனவு மற்றும் விநியோகித்தல் என்பன முறையாக அறிக்கையிடப்படாமை. |
| | (ii) | இருப்பு பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்படாமை. |
| (இ) கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | கணக்குகளின் காலப்பகுதிகளுக்குரிய கடன்பட்டோரையும் கடன்கொடுத்தோரையும் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யாமை. |
| | (ii) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் தாமதமின்றி தீர்த்து வைக்காமை |